

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (13.12.2023) தலைமைச் செயலகத்தில், எம்.ஆர்.எப். நிறுவனத்தின் துணைத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் அருண் மேமன், நிர்வாக இயக்குநர் ராகுல் மேமன் மாப்பிள்ளை ஆகியோர் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 3 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினர். உடன் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (13.12.2023) தலைமைச் செயலகத்தில், டால்மியா குழுமத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் அர்மித் சிங் சேத்தி சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 1 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, டால்மியா குழுமத்தின் செயல் இயக்குநர் கே.விநாயகமூர்த்தி, கே.இராமநாதன் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (13.12.2023) தலைமைச் செயலகத்தில், மகேந்திரா ஆராய்ச்சி கூடத்தின் (Mahendra Research Valley) தலைவர் வேலுசாமி சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 1 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, மகேந்திரா ஆராய்ச்சி கூடத்தின் துணைத் தலைவர்கள் மதன்ராஜ் மற்றும் சக்திவேலன் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (13.12.2023) தலைமைச் செயலகத்தில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே. பாலகிருஷ்ணன், மத்தியக் குழு உறுப்பினர் பி. சம்பத், மாநில செயற்குழு உறுப்பினர் கே. சாமுவேல்ராஜ் ஆகியோர் சந்தித்து, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (13.12.2023) தலைமைச் செயலகத்தில், கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சியின் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான கொங்கு ஈஸ்வரன் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சியின் நிர்வாகிகள் டி.கே.எஸ். ரமேஷ், நித்யானந்தம், அசோகன், இசை பாலு, ஜெ.கே.மூர்த்தி, விவேகானந்தன், ரமேஷ் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (13.12.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் மாநிலத் தலைவர் அமிர்தகுமார் நிர்வாகிகளுடன் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் சங்க உறுப்பினர்களின் ஒருநாள் ஊதியத்தை வழங்குவதற்கான ஒப்புதல் கடிதத்தை வழங்கினர். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.



மிக்ஜாம் புயல் – கன மழையைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசு எடுத்து வரும் நிவாரணப் பணிகளை மேலும் வலுப்படுத்துகிற வகையில் பல்வேறு தரப்பினரும் நிதியுதவி அளித்து வருகின்றனர். அந்த வகையில், அரசின் வெள்ள நிவாரணப் பணிகளுக்காக 'முதலமைச்சரின் பொது நிவாரண நிதி'-க்கு திரைப்பட நடிகர் விஷ்ணு விஷால், ரூ.10 லட்சத்துக்கான காசோலையை நேற்று முன்தினம் கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினார்.

# இராயபுரம் பகுதிவாழ் மக்களுக்கு நிவாரண உதவிகள்!

## தா.இளைய அருணா, எர்ணாவூர் நாராயணன் வழங்கினர்!

சென்னை, டிச.15-

மிக் ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட இராயபுரம் பொது மக்களுக்கு அறுசுவை உணவு மற்றும் பெட்ஷீட், புடவை, கைலி, வேட்டி, பிரட், ரஸ்க், உள்ளிட்ட மளிகை பொருட்கள் வழங்கப்பட்டது.

இதில் சிறப்பு விருந்தினர்களாக சென்னை மாநகராட்சி நிலைக்குழு தலைவரும் சென்னை வடக்கு மாவட்ட செயலாளர் தா.இளைய அருணா மற்றும் தமிழ்நாடு பனைமர தொழிலாளர் நலவாரிய தலைவர் எர்ணாவூர் நாராயணன் ஆகியோர் கலந்து கொண்டு 2024 ஆம் ஆண்டுக்கான வண்ணாரப்பேட்டை எம்.சி. ரோடு,ஜி.ஏ. ரோடு,சுற்றுவட்டார வியாபாரிகள் சங்க காலண்டரை சங்க நிர்வாகிகளுக்கு கொடுத்து, ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை வண்ணாரப்பேட்டை எம்.சி. ரோடு, ஜி.ஏ.ரோடு, சுற்று வட்டார வியாபாரி நல சங்கத்தினர் செய்திருந்தனர்.

சங்கத்தின் தலைவரும் சென்னை வடக்கு மாவட்ட சிறுபான்மை அணி மாவட்ட தலைவர் தமிமுன் அன்சாரி ஒருங்கிணைப்பாளர் சரவண குமார், செயலாளர் சுப்பிரமணியன், மம்மி டாடி பாஸ்கர், காமாட்சி கண்ணன், எஸ்.ஆர்.எம்.ஏ. சிங்காரத்தோட்ட வியாபாரிகள் சங்கத்தினர் தலைவர் செயலாளர் மற்றும் வியாபாரி சங்க தலைவர் ராபர்ட், சென்னை மிட்டாய் வியாபாரிகள் சங்க தலைவர் கணேசன், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு நிர்வாகிகள் ஜகாரியா,சரவணன், மற்றும் கார்த்திக், பட்டை வேட்டி உதயராஜ், சிங்காரத்தோட்டம் டெக்ஸ்டைல்ஸ் வியாபாரிகள் சங்கத் தலைவர், எம்.சி.ரோடு வணிக வளாகத்தின் தலைவர் தோழர் செல்வானந்தம், வண்ணாரப்பேட்டை எம்.சி.ரோடு ஜி.ஏ.ரோடு சுற்று வட்டார வியாபாரி சங்க பொருளாளர் பிஜு துணைத் தலைவர்கள் மாரிமுத்து,சக்தி, நாகேந்திரன், எஸ்.வி.தன்ராஜ், கட்பீஸ் ஆனந்தகுமார், எம்.சி.ராஜசேகர், எம்.கே.சாகுல் ஹமீது, துணைச் செயலாளர் மற்றும் இளைஞர் அணியினர் தட்சிணாமூர்த்தி, லோகேஷ் குமார், ரமேஷ், முருகன், சுப்புராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



இயற்கைப் பேரிடரால் மக்கள் சந்தித்த இன்னலை தீர்க்க, கழக அரசு எடுத்து வரும் முயற்சிகளுக்கு பலரும் நிதியளித்து துணை நின்றுவரும் நிலையில், சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு மேற்கு பகுதிக் கழக பொருளாளர் கமலக்கண்ணன், ரூ.2 லட்சத்திற்கான காசோலையை 'முதலமைச்சரின் பொது நிவாரண நிதி'க்கு கழக இளைஞர் அணிச் செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினார். உடன் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு உள்ளார்.